சென்னை–6, தொழிலாளர் இணை ஆணையர்(நிர்வாகம்) அவர்களின் செயல்முறை ஆணைகள்
முன்னிலை: திருமதி. உ. உமாதேவி. பி.ஏ., பி.எல்.,

சுருக்கம்

பணிக்குழு – தொழிலாளர்துறை – தமிழ்நாடு அமைச்சுப்பணி – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் 2013–14–ம் ஆண்டிற்கு தெரிவு செய்யப்பட்டு – தொழிலாளர் துறையில் தட்டச்சராகப் பணிநியமனம் செய்யப்பட்டது – பணியில் சேர்ந்த நாள் முதல் தட்டச்சர் பதவியில் பணிவரன்முறை செய்தும் தகுதிகாண் பருவத்தில் வைத்தும் உத்தரவிடப்படுகிறது.

ஜி3/28178/14 நாள்: 16.12.15.

படிக்கப்பட்டது;

1. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய கடித எண். 5901/PSD-F/2014, நாள். 13.08.14 மற்றும் 29.09.14.
2. சென்னை, தொழிலாளர் ஆணையர் அவர்களின் செயலாணை எண். ஜி3/28178/2014, நாள். 04.09.14.
3. சென்னை, தொழிலாளர் ஆணையர் அவர்களின் செயலாணை எண். ஜி3/38317/2014, நாள். 21.11.14.

******

ஆணை:

சென்னை, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் இளநிலை உதவியாளர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு, மேலே 1–ல் காணும் தேர்வாணய கடிதங்களின் மூலம் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தட்டச்சர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு, தொழிலாளர் துறை மற்றும் தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கத்தில் பணிநியமனம் வழங்கும் பொருட்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட நபர்களில் மேலே 2 மற்றும் 3–ல் காணும் செயல்முறை ஆணைகளின்படி, கீழ்காணும் பட்டியலில் கலம் 2–ல் காணும் 5 தெரிவாளர்களுக்கு தட்டச்சர்களாக தொழிலாளர் துறையில் பணிநியமனம் செய்யப்பட்டு, கலம் 3–ம் காணும் நாள் முதல் தட்டச்சர்களாகப் பணிபுரிந்து வருகிறார்கள்.

| வ. எண். | தெரிவாளர்களின் பெயர் | தட்டச்சராகப் அரசுப் பணியில் சேர்ந்த நாள் | தட்டச்சர் பதவியில் பணிவரன்முறைப் படுத்தப்படும் நாள் |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | எம். பிரேம்குமார் | 10.09.14 முற்பகல் | 10.09.14 முற்பகல் |
| 2 | என். பரணிதரன் | 11.09.14 முற்பகல் | 11.09.14 முற்பகல் |
| 3 | கி. வரதன் | 12.09.14 முற்பகல் | 12.09.14 முற்பகல் |
| 4 | அ. கண்ணகி | 13.10.14 முற்பகல் | 13.10.14 முற்பகல் |
| 5 | க. அருள்முருகன் | 24.11.14 பிற்பகல் | 24.11.14 பிற்பகல் |

மேலே 1–வதாக படிக்கப்பட்ட 13.08.14 தேதியிட்ட தேர்வாணையக் கடிதத்தில் இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தட்டச்சர்களின் பணியினை அவர்கள் தட்டச்சராகப் பணியில் சேர்ந்த நாள் முதல் வரன்முறை செய்யப்படலாம் எனவும், மேலும், தனியர்களது பணியினை கீழ்க்கண்ட

நிபந்தனைக்குட்பட்டு தட்டச்சர் பதவியில் வரன்முறை செய்யுமாறு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் அறிவுறுத்தியுள்ளது.

"The regularization is subject to the outcome of the WPs pending on the files of the Hon'ble High Court of Madras/Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to Group IV 2013 - 2014 recruitment"

எனவே, தனியர்களது பணியினை சென்னை/மதுரை கிளை உயர்நீதிமன்றங்களில் 2013–14–ம் ஆண்டில் தொகுதி–IV–ன் தெரிவிற்கெதிராக நிலுவையிலுள்ள ரிட் மனுக்களின் இறுதி தீர்ப்பிற்குட்பட்டு அவர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் வரன்முறை செய்யப்படுகிறது.

மேலும், தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகள் விதி 23 (a) (i) மற்றும் தமிழ்நாடு அமைச்சுப்பணியின் கீழ் பொது விதி 32–ன் கீழ் தட்டச்சர் பதவியில் பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறை செய்தும் மூன்றாண்டு கால தொடர் பணியில் இரண்டாண்டு கால தகுதிகாண் பருவத்தில் வைத்தும் உத்தரவிடப்படுகிறது.

இத்தகுதிகாண் பருவ காலத்தில் அரசாணை எண். 130, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை நாள். 22.07.08ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு தனியர் பணிநியமனம் பெற்ற நாளிலிருந்து இரண்டு வருடங்களுக்குள் Directorate of Technical Education நடத்தும் Certificate Course in Computer on Office Automation என்ற பயிற்சித் தேர்வில் தேர்ச்சி பெற்றால் மட்டுமே அவரது தகுதிகாண் பருவத்தை பூர்த்தி செய்ய இயலும் என்பதால் தனியர்கள் அத்தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் எனவும் உத்திரவிடப்படுகிறது.

மேலும், தனியர்கள் உதவியாளராகப் பதவி உயர்வு பெறுவதற்கு, தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை தேர்வு, சார்நிலை அலுவலர்களுக்கான கணக்குத் தேர்வு பாகம்–I மற்றும் தொழிலாளர் மற்றும் தொழிற்சாலைகள் துறை தேர்வுகள் பகுதி அ மற்றும் ஆ ஆகியவற்றில் தேர்ச்சி பெற வேண்டும் எனவும் அறிவுறுத்தப்படுகிறது.

ஒம்./– உ. உமாதேவி
தொழிலாளர் இணை ஆணையர்
(நிர்வாகம்)

பெறுநர்

கலம் 2–ல் காணும் தட்டச்சர்கள், இவ்வலுவலகம்.

நகல்

1. இவ்வலுவலக ஜி4 இருக்கை.
2. பணிப்பதிவேடு/உதிரி.

// அனுப்பப்படுகிறது //

தொழிலாளர் இணை ஆணையருக்காக
(நிர்வாகம்)

18/12/15

13.